செ.வெ.எண். 164/2009(செமதொஅ) நாள் : 12.06.2009.

**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின உறுதிமொழி எடுத்துக் கொள்ளப்பட்டது.**

ஒவ்வொரு ஆண்டும் ஜுன் திங்கள் 12 ஆம் நாள் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தினமாக நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. அதனையொட்டி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலுகத்திலுள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. எஸ்.பழனி அவர்கள் தலைமையில் அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்(பொது) அவர்கள் உறுதிமொழியினை முன்மொழிய, அதனைத் தொடர்ந்து அரசு அலுவலர்களும், பணியாளர்களும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. க.சுந்தரம். தேசிய குழந்தை தொழிலாளர் திட்டத்தின் திட்ட அலுவலர் திரு. டி. முத்து பிரகாஷ் மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலக பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காஞ்சிபுரம்.**